**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARANI,**
**S.C.No.107/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.4** |
| **Name** | **:** | **Tr.Guna** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.06.2022.**

**முதல் விசாரணை -**

**நான் புலிவலம் கிராமத்தில் வசிக்கிறேன். ஏ.சி. மெக்கானிக்காக பணிபுரிகிறேன். 2013ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. இரவு 11, 11.30 மணிக்கு ஒரகடத்தில் வேலை முடித்துவிட்டு பிஒய்டி கம்பெனி பேருந்தில் சீவரம் வந்தேன். வண்டியின் பதிவெண் ஞாபகம் இல்லை. சீவரம் அருகில் திரு ராமதாஸ் அவர்களை கைது செய்தது சம்பந்தமாக பஸ்சை மடக்கி கண்ணாடியை உடைத்துவிட்டார்கள். யார் உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் தான் நான் வந்த பேருந்து எரித்துவிட்டார்கள் என்று தெரிந்துக்கொண்டேன்.**

**(சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

**3.5.2013 அன்று வேலையை முடித்துவிட்டு இரவு 12.30 மணிக்கு பிஒய்டி கம்பெனி பேருந்து பதிவெண் டிஎன்.19-6777-ல் வந்தபோது சீவரம் அருகில் ஆஜர்**

**எதிரிகள் மாதவன் ரவிச்சந்திரன் மற்றும் பாஸ்கரன் சண்முகம் ஆகியோர் நாங்கள் வந்த பேருந்தை மடக்கி பேருந்தில் வந்தவர்களை இறக்கி பேருந்தை சேதப்படுத்தும் உட்கருத்துடன் ஈச்ச மரத்தை வெட்ட பேருந்தின் அடியில் வைத்து தீவைத்து கொளுத்தி பேருந்தை எரித்ததில் ரூ.18,51,350-க்கு சேதம் விளைவித்தனர் என்பதை குறித்து போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை -**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.